# ககி ஒளி மூலம் கருவிழி சீர்திருத்தம். (லேசிக்)

## நோயாளியின் தரவு

நோயாளியின்பெயர்................................வயது/பாலினம்.................................................
நோயாளியின்அடையாளம்:........................தேதி...........................மகன்/மகள்................
முகவரி.........................................................................தொலைபேசி............................................................

## மருத்துவம்நடைபெறும்இடம்

## நோய் அறிதல் & திட்டமிடப்பட்டுள்ள சிகிச்சை

ககி ஒளி மூலம் கருவிழி சீர்திருத்தம் கார்னியாவை மறுவடிவமைக்கிறது,

லேஸிக் சிகிச்சை என்பது கருவிழியில் மேற்பரப்பில் ஒரு மெல்லிய படலத்தை (FLAP) நுண்கத்தி / ஃபெம்டோலேஸர் கொண்டு உருவாக்கி, அதை மடக்கி விட்டு அடியில் உள்ள கருவிழியின் நடுப்பகுதியை எக்ஸைமர்லேஸர் கொண்டு மறுவடிவமைப்பு செய்யும் முறையாகும். பிறகு மடக்கப்பட்ட அந்த மேற்படலம் மீண்டும் விரிக்கப்பட்டு அடிப்பகுதியுடன் இயல்பாக பொருத்தப்பட்டுவிடும்.

இச்சிகிச்சையின் போது நோயாளி தன் பார்வையை சிமிட்டும் விளக்கை உற்றுப்பார்ப்பதின் மூலம் சரியான நடுப்பகுதியில் சரியான சிகிச்சை பெற இயலும். சிகிச்சையின் போது ஒருவித 'கிளிக்' ஒலியும், முடிகருகுவது போன்ற மணமும் உணரப்படும்.

## பலன்கள்

இச்சிகிச்சையின் நோக்கம் எனது கிட்டப்பார்வை / தூரப்பார்வை / சிதறல் பார்வை குறைக்கப்பட்டு மூக்குக்கண்ணாடி அல்லது ஒட்டுக்கண்ணாடி ஏதும் அணியாமல் நல்ல பார்வை கிடைப்பதற்காகவே! ஆயினும், ஆகச்சிறந்த பார்வை கிடைக்கப் பெறும் என்பதற்கான உத்திரவாதம் இதில் இல்லை என்பதையும் அறிகிறேன்.

## வேறுமுறைகள்

மூக்குக்க ண்ணாடியும், ஒட்டுக்கண்ணாடியும் மிகச்சிறந்த பார்வைக்கான வழிகள் என்பதையும், லேஸிக் சிகிச்சை என்பது இவை இரண்டையும் சார்ந்து வாழ்வதைத் தடுக்க மற்றொரு வழிமுறையே என்பதை அறிகிறேன்.

## இதன்பக்கவிளைவுகள், ஆபத்துக்கள், சிக்கல்கள்:-

சிலருக்கு சிகிச்சைக்குப் பிறகும் கண்ணாடி அணியத் தேவை இருக்கலாம். ஏன் எனில் இச்சிகிச்சையின் கணக்குகள் பெரும்பாலான மக்களின் லேஸர் சிகிச்சை அனுபவங்களின் வாயிலாகத் திரட்டப்பட்டவை. அவை ஒரு தனிப்பட்ட மனிதருக்கு முற்றிலும் சரியாக பொருந்தாமல் போகலாம். அதன் விளைவாக அவருக்கு சிகிச்சை, தேவைக்கு மேலோ, கீழோ அமையலாம். அதன் பொருட்டே அந்த அளவிற்கான கண்ணாடி தேவைப்படலாம்! மறுசிகிச்சை தேவைப்படின் 6 மாத காலம் காத்திருத்தல் அவசியம்.

## வெள்ளெழுத்து

இளம் வயதில் லேஸிக் சிகிச்சைக்குப் பிறகு துல்லிய பார்வை இருப்பினும், 40 முதல் 45 வயதிற்கு மேல் எல்லோருக்கும் வரும் வெள்ளெழுத்து என்னையும் பாதிக்கும். அதனால் படிக்கக் கண்ணாடி அணிவது அவசியம் ஆகும். இதற்கும் லேஸிக்சிகிச்சைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அறிகிறேன்!

## லேஸிக் சிகிச்சைக்குப் பின் பார்வை:

சிகிச்சைக்கு முன் கண்ணாடியில் கிடைத்த தெளிவான பார்வையை விட சிகிச்சைக்குப் பின் பார்வை சற்று குறைவானதாக இருக்க வாய்ப்புண்டு.

கூச்சம் ,பொறிப்பொறியாய்த் தெரிதல், இரட்டைப்பார்வை இவை சிகிச்சைக்குப்பின் முதல் 24 மணிநேரம் இருக்கலாம். அவை 1 முதல் 4 வாரங்களில் பெரும்பாலும் மறைந்து விடும்.

## அரிதியான சிக்கல்கள்:

நோய்த் தொற்று, கருவிழிவீக்கம், மேற்படலம் இழப்பு அல்லது சிதைவு வரலாம்.

## நீண்ட நாள் மாற்றம்

மீண்டும் பழையபடி கண்ணாடி / ஒட்டுக்கண்ணாடி அணிய வேண்டிய வகையில் கண்ணின் பார்வைத்திறன் மாறலாம்.

## தொழில் நுட்பக் கோளாறு / தோல்வி:

தொழில்நுட்பக் கோளாறு / தோல்வி ஏற்படுவதனால் சிகிச்சை நிறுத்தப்படலாம். பிறிதொரு நாளுக்கு மாற்றி வைக்கப்படலாம்.

## நோயாளியின் அறிக்கை

மேற்கூறப்பட்ட அனைத்து விளக்கங்களையும் ,அறிந்து, உணர்ந்து , தெளிந்து ,எனது வலது / இடது / இரண்டு கண்ணில் இச்சிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொள்ள முழுமனதோடு சம்மதிக்கிறேன். எனது எல்லாக் கேள்விகளுக்கும் நிறைவான பதில் கிடக்கப் பெற்றேன்.!

நோயாளி/ பெற்றோர்/ பாதுகாவலரின் கையொப்பம் / கட்டை விரல் பதிவு:
பெயர்:................................................ உறவு.................... தேதி ............................................
முகவரி:..........................................................................................................................................
தொலைபேசி (அலு) ........................ (வீடு.) ............................. (கைபேசி.).........................

## மருத்துவர் பிரகடனம்:

நான் நோயாளியிடம் சிகிச்சை முறை பற்றியும், அதன் பலன்கள் பக்கவிளைவுகள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தேன்.

நோயாளி என்னிடம் கேள்வி கேட்க வாய்ப்பளிக்கப்பட்டது. பதிலும் அளிக்கப்பட்டது

மருத்துவரின் கையெழுத்து ................................................................
மருத்துவரின் பெயர் ................................................................
தேதி ................................................................

சாட்சி 1
கையொப்பம்: ..................................
பெயர்:.................................................
முகவரி: ...........................................
தொலைபேசி .................................
கைபேசி.............................................

சாட்சி 2
கையொப்பம்: ..................................
பெயர்:.................................................
முகவரி: ...........................................
தொலைபேசி: .................................
கைபேசி .............................................